DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 35/2019 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1- இருசா | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 09.06.2025 |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியில் நான் ஈரோடு மாவட்ட ஆயுதப்படையில் காவலராக இருந்தேன் என்றால், சரிதான். பணியின்போது நீங்கள் உங்களது காவலர் குடியிருப்பில் தான் இருக்க வேண்டும் என்றால், சரியல்ல. நான் எனது ஓய்விற்கு வர வேண்டும் என்றால் எனது உயரதிகாரியிடம் இருந்து ஒப்புதல் பெற்ற பின்பு தான் வெளியே வர முடியும் என்றால், சரியல்ல. காவலர் நிலையத்தில் ஒவ்வொரு காவலரும் பணி குறித்து ஒரு பாக்கெட் டைரி பராமரித்து வர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியும் என்றால், சரிதான். அந்த பாக்கெட்ட டைரியில் நான் தினசரி செய்யும் வேலைகளை குறிப்பிட்டு எழுத வேண்டும் என்றால், சரியல்ல. 07.07.2019 ஆம் தேதியில் நான் மாவட்ட ஆட்சியரிடம் காவலராக பணியில் இருந்த விபரத்தை எனது பாக்கெட் டைரியில் எழுதி உள்ளேனா என்றால், நான் எழுதவில்லை. பொதுவாக ஆயுதப்படையில் இருப்பவர்கள் பாக்கெட் டைரி எழுதுவதில்லை. காவல் நிலைய ஆணைப்படி ஆயுதப்படை காவலர்களுக்கு பாக்கெட் டைரி பயன்படுத்தக் கூடாது என்பதற்கு எந்தவித விதிவிலக்கும் கொடுக்கப்படவில்லை என்றால், சரிதான்.

எனக்கு சொந்தமாக உள்ள போர்வெல் மற்றும் மோட்டார் ரூமிலுள்ள ஓயர்கள் யாருடைய பெயரில் அந்த போர்வெல் மற்றும் மோட்டார் உள்ளது என்பதை உங்களது புகாரிலும், போலீசார் விசாரணையிலும் கூறவில்லை என்றால், சரிதான். எனது சித்தப்பாக்களின் பெயர்கள் செங்கோட்டையன் மற்றும் பழனிச்சாமி ஆகும். நான் குடியிருக்கும் வீடு எனது தந்தைக்கும் எனது சித்தப்பாக்களுக்கும் பொதுவான வகையில் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். செங்கோட்டையன் மற்றும் பழனிச்சாமிக்கு பாத்தியமான பாகத்தை எதிரி வாங்கிக் கொண்டார் என்ற விவரம் தெரியுமா என்றால், பழனிச்சாமியிடமிருந்து நிலம் வாங்கியது மட்டும் எனக்கு தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், மேற்படி போர்வெல் மற்றும் மோட்டார் இருக்கும் இடத்திற்கும் எதிரிக்கு கூட்டு பங்கு உள்ளது என்றால், சரியல்ல. போர்வெல் மற்றும் மோட்டார் இருக்கும் இடம் யார் பெயரில் உள்ளது என்ற எந்த ஆவணமும் போலீசார் விசாரணையின்போது போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால், சரிதான்.

எதிரி அறுத்த ஒயரை எடுத்து என்னை அடித்ததாக எனது போலீஸ் விசாரணையிலும், புகாரிலிலும் கூறவில்லை என்றும் இந்நீதிமன்றத்தில் முதன்முதலாக தான் கூறுகிறீர்கள் என்றால், சரியல்ல. நான் போலீஸ் விசாரணையின்போது கூறினேன். இவ்வழக்கில் எதிரி இடத் தகராறு செய்து வந்ததாகத்தான் உங்களது புகாரியிலும், போலீசார் விசாரணையிலும் நீதிமன்றத்தின் முதல் விசாரணையிலும் கூறியுள்ளேன். ஆனால் அந்த இடத்தகராறு என்னவென்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரிதான். எதிரி ஒயரை எடுத்து என்னை முதுகில் அடித்ததில் எனக்கு இரத்தக் காயம் அல்லது வீக்கம் ஏற்பட்டதா என்றால், வீக்கம் ஏற்பட்டது.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் மெயின் ரோடு உள்ளது என்றால், சரிதான் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகாமையில் நிறைய வீடுகள் உள்ளது என்றால், சரியல்ல. 2,3 வீடுகள்தான் இருக்கும். எனக்கும், எதிரிக்கும் வாய் சண்டை சுமார் அரை மணி நேரம் இருக்கும் என்றால், சரிதான். மேற்படி வாய் தகராறு அருகாமையில் இருந்த நபர்கள் பார்த்தார்களா என்றால், பார்க்கவில்லை. அருகில் உள்ளவர்கள் அனைவரும் தோட்டத்து வீட்டுக்காரர் என்பதால் பார்க்கவில்லை. சம்பவத்திற்கு பின்னிட்டு எனது மனைவியோ தாயாரோ எவ்வித முதலுதவி சிகிச்சையும் செய்யவில்லை என்றால், சரிதான் மேற்படி அரை மணி நேரம் சம்பவத்தில் எனது தாயாரோ அல்லது மனைவியோ பவானி காவல் நிலையத்திற்கு போலீசை அழைக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை என்றால், சரியல்ல. முயற்சி செய்தார்கள். தகவல் கிடைத்து உடனடியாக போலீசார் சம்பவயிடத்திற்கு வந்து விட்டார்கள் என்றால், சரியல்ல.

நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு தான் போலீசார் வந்தார்கள். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது சுயநினைவுடதான் இருந்தேன் என்றால், சரிதான். நான் மருத்துவமனைக்கு சுயநினைவுடன்தான் சென்றேன் என்று ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மருத்துவர் விசாரணையில் என்னை அடையாளம் தெரியாத 10 நபர்கள் அடித்ததாக தான் கூறியுள்ளேன் என்றால், சரியல்ல நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும் நீங்கள் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் தேதியில் ஈரோடு ஆயுதப்படை பணியில் இருந்தேன் என்றும் சம்பவயிடத்தில் இல்லை என்றாலும், சரியல்ல.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்னர் 1ம் எதிரி எனது அம்மாவிடமும் மனைவியிடமும் பிரிக்கப்படாத பாகப்பிரிவினை பொறுத்து பாகப்பிரிவினை கேட்டார்கள் என்றால், சரியல்ல அப்போது எனது மனைவியும், எனது அம்மாவும், எதிரிக்கு பாத்தியப்பட்ட சொத்தை தங்களுக்கு தர வேண்டும் என்றும் அப்படி தரவில்லை என்றால், எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விடுவோம் என மிரட்டினார்கள் என்றால், சரியல்ல எதிரி ஒத்துக் கொள்ளாததால் இப்பொய் புகாரானது கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி பாகப்பிரிவினை பிரச்சனை இருப்பதால்தான் உங்களது புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் என்ன இடத்தகராறு என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரியல்ல. நீங்கள் பவானி போலீசாரை தவறாக வழி நடத்தி இவ்வழக்கின் இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.09 06:04:11 +0530

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 35/2019 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2- அய்யம்மாள் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 09.06.2025 |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சின்ன மாமனார் பெயர் செங்கோட்டையன் மற்றும் பழனியப்பன் ஆகும். பழனியப்பன் சொத்தை தான் எதிரி விலைக்கு வாங்கினார் என்றால், அதைப் பற்றி எனக்கு தெரியாது. எவ்வளவு வருடமாக எதிரிக்கும், உங்களுக்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்து வருகிறது என்றால், சுமார் 3 வருடங்களாக இருந்து வருகிறது. எதிரி வாங்கிய நிலத்தில் விவசாயம் செய்வதற்காக சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மோட்டார் மற்றும் போர்வெல் ரூமில் விவசாயத்திற்கு தண்ணீர் போட பயன்படுத்தி வந்தார் என்றால், சரியல்ல. இந்த 3 வருட பிரச்சனையில் எதிரி காட்டைப் பிரித்து தரச் சொல்லி உங்களிடம் பேசி வந்தார் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் மோட்டார் அறை மற்றும் கிணறு ஆகியவை அனைவருக்கும் பொதுவானது என்றால், சரிதான்.

எதிரியும், உங்களது சின்ன மாமனாரான பழனிச்சாமியும் இடம் வாங்கியதால் அவருக்கும் அதில் பாத்தியம் உள்ளது என்றால், சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் வீடுகள் அதிகமாக உள்ளது என்றால், சரியல்ல. 2, 3 வீடுகள் தான் இருக்கும். எதிரிக்கும், அ.சா.1 ஆன எனது கணவருக்கும் வாய் தகராறு சுமார் அரை மணி நேரம் நடந்திருக்கும் என்றால், சரிதான். இந்த வாய் தகராறு சண்டையாக மாறிவிடக்கூடாது என்பதற்காக நானும், எனது மாமியாரும் பவானி காவல் நிலையத்திற்கு அழைத்தோமா என்றால், அழைத்தோம். நான் அழைத்ததும் சம்பவயிடத்திற்கு போலீசார் உடனடியாக வந்து விட்டார்கள் என்றால், சரிதான். போலீசாரிடம் நடந்த விபரத்தை நானும், எனது மாமியாரும் கூறினோமா என்றால், கூறினோம். மேற்படி சொன்ன சங்கதிகளை போலீசார் எழுதி எங்களிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால், பெற்றார்கள்.

எதிரி அடித்ததாக சொல்லப்படும் ஒயர், கல், கட்டிங் பிளேடு போன்றவற்றை நான் போலீசாரிடம் எடுத்துக் கொடுத்தேன் என்றால், சரிதான். வாய் சண்டை நடந்து கொண்டிருக்கும்போது வீட்டின் அருகில் உள்ளவர்கள் வந்து பார்த்தார்கள் என்றால், சரிதான். நீங்கள் நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல், சொன்ன நேரத்தில், எதிரிகள் யாரையும் அடிக்கவில்லை என்றால், சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எனது கணவர் ஈரோடு ஆயுதப் படையில் இருந்தார் என்றால், சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு 2 நாட்களுக்கு முன்னர் எதிரி உங்களை அணுகி பாகப்பிரிவினை கோரி கேட்டார் என்றும், நீங்கள் பாகப்பிரிவினை செய்து தர முடியாது என்று மறுத்தீர்கள் என்றாலும், சரியல்ல. எதிரி வாங்கிய சொத்தை உங்களுக்கு எழுதி தரவில்லை என்றால், எதிரி மீது பொய் புகார் கொடுக்கப்படும் என்று மிரட்டி வந்தீர்கள் என்றால், சரியல்ல.

உங்களது கணவரின் அதிகாரத்தை பயன்படுத்தி இப்பொய் புகார் கொடுக்கப்பட்டது என்றால், சரியல்ல. எனது கணவருக்கு நான் முதலுதவி சிகிச்சையும் செய்யவில்லை என்றும் அவருடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால், சரியல்ல. எனது கணவரை நான் தான் அரசு மருத்துவமனையில் அனுமதித்தேன் என்றால், சரிதான். எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்தை மருத்துவர் விசாரிக்கும் போது எனது கணவர் தான் பதில் அளித்தார் என்றால், சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எவ்வித சம்பவம் நடைபெறவில்லை என்றும் உங்களது கணவருடன் மருத்துவமனைக்கு சென்றேன் என்று கூறுவதும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.09 06:04:45 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC.No. 35/2019 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW-5- தொப்பநல்லக்கவுண்டர் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 09.06.2025 |

**எதிரி ஆஜர்**

**எதிரி தரப்பில் மனு அனுமதிக்கப்பட்டதன் பெயரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள கிணற்று மோட்டார் எதுவும் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால், சரிதான். பழனியப்பன் பாகத்தை தான் 1ம் எதிரி வாங்கியுள்ளார் என்றால், சரிதான். 3 வருடம் காலமாக பாகப்பிரிவினை தொடர்பாக எதிரிக்கும், அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்து வருகிறது என்றால், சரிதான். மேற்படி பாகப்பிரிவினை தொடர்பாக ஊர் பஞ்சாயத்தார்கள் மற்றும் காவல் நிலையத்தில் சமரசம் பேசப்பட்டு, சமரசம் ஆகவில்லை என்றால், சரிதான்.

எனது மகன் இருசா ரோட்டு ஓரத்தில் உள்ள இடத்தை கேட்டதால்தான், எதிரிக்கும், இருசாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால், சரியல்ல. 3 வருட காலங்களாக எதிரி சம்பவயிடத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால், சரியல்ல. அவர் விவசாயம் எதுவும் செய்து வருவதில்லை. நான் எதிரி விவசாயம் செய்வதற்கு விடவில்லை என்றால், சரியல்ல சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால், விசாரித்தார்கள்.

மேற்படி சம்பவத்தைப் பற்றி நேரடியாக தெரியாது என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது நீதிமன்றத்தில் நேரடியாக சம்பவத்தை பார்த்தேன் என்று கூறுகிறீர்கள் என்றால், சரியல்ல. வழக்கு விவரங்கள் எதுவும் உங்களுக்கு தெரியாது என்றும் உங்களது மகன் இருசா கேட்டுக் கொண்டதற்கிணங்க இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2025.06.09 06:04:24 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.